DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.95/2018**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : சாந்தா
Father/ Husband Name : ஆறுமுகம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 18.11.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் பக்கந்தான்குடியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2018ம் வருடம் தேதி ஞாபகமில்லை காலை 10.00 மணியளவில் ஆனந்தூர் ரோட்டில் துடியடி கொல்லை அருகே வேலை பார்த்துவிட்டு வீட்டுக்கு வரும்போது மூன்றுபேர்கள் வெள்ளை பிளசரில் வந்தார்கள். வந்து பேசி கொண்டிருக்கும்போது தாலிச்செயினை அத்துவிட்டார்கள். தாலிச்செயின் எடை 4 பவுண். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1).** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையது தான். **(புகைப்படம் அ.த.சா.ஆ,2).** நான் தேவகோட்டையில் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் தாலிச்செயினை அத்துப்போனதாக சொல்லப்படும் அன்றைய தினமே காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் 4 பவுண் தாலிச்செயினை அத்துப்போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க நான் மட்டும் தான் சென்றேன். எனது கணவர் அப்போது திருப்பூரில் இருந்தார். எனது தாலிச்செயின் அருந்துபோய்விட்டது. எனது கழுத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எனக்கு கழுத்தில் இரத்தக்காயம் ஏற்பட்டதையும், தாலிச்செயினை அத்துப்போனதையும் புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றாால் சரிதான். நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்தவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்றால் சரிதான். எனது வயலிலிருந்து ரோடு 3அடி தூரத்தில் ரோடு உள்ளது , பக்கத்து வயலில் உள்ள ஆட்கள் நான் கத்தியதை பார்த்து வந்தார்கள். நான் கத்திய பின்னர் என்னிடம் தாலிச்செயினை அத்ததாக சொல்லும் நபர்கள் அங்கிருந்து சென்ற பின்னர் தான் பக்கத்து வயலிலுள்ள ஆட்கள் வந்தார்கள் என்றால் சரிதான்.

2. நான் புகார் கொடுத்த உடனே என்னை விசாரணை செய்தார்கள் என்றால் அன்றைய தினமே விசாரித்தார்கள். நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேன். யார் காரை ஓட்டிவந்தது, யார் அத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சிவப்பாக இருக்கும் ஒருநபர் தான் அத்தார். என்ன வகையான கார் மற்றும் அதன் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் வெள்ளை கார். நான் சொன்னது போல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.